ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/9 - 2020 ජූනි මස 29 වැනි සඳුදා - 2020.06.29

*2182/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, அனுமதி பெறாமல் தொடர்ச்சியாக மூன்று சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காமை காரணமாக, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ், கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் இலக்கம் 15 - மெகொட கொலொன்னாவ வட்டாரத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மொஹமட் நிலாம்டீன் மொஹமட் நிஸ்தார் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியை சேர்ந்தவருமான கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் இலக்கம் 15 - மெகொட கொலொன்னாவ வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக அப்துல் வஹாப் மொஹமட் ஷிஹான் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜய குமார ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு அப்துல் வஹாப் மொஹமட் ஷிஹான் என்பவர் கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் இலக்கம் 15 - மெகொட கொலொன்னாவ வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
*2020, யூன் 29.*

*7 -391*

1A - G 32404 - 27 (2020/06) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*